# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை 2025 (2026)
# தமிழ் இலக்கிய நயம்
## பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

'நயம்பேசு புகழ்' தமிழாசிரியர், இரா.நிஷாந்தன் BA (Tamil)

### வினாத்தாள் கட்டமைப்பு

**பகுதி I**

**வினா இலக்கம் – 1**

- இந்த வினாப் பகுதியில் ஐந்து 5 குறுவினாக்கள் இடம்பெறும்.
- இந்த ஐந்து வினாக்களில் மூன்று வினாக்கள் செய்யுள் மற்றும் கவிதைப் பகுதிகளில் இருந்தும், ஒரு வினா கட்டுரைப் பகுதிகளில் இருந்தும், சிறுகதைப் பகுதிகளில் இருந்தும் இடம்பெற்று வருகின்றன.

**வினா இலக்கம் – 2**

- ஒரு செய்யுள் பகுதி மற்றும் உரைப்பகுதி தரப்படும். அதன் கீழ் நான்கு வினாக்கள் இடம்பெறும். நீங்கள் விரும்பியவாறு செய்யுள் அல்லது உரைப்பகுதி ஏதேனும் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்.

**பகுதி II**

**வினா இலக்கம் – 3**

- இலக்கியம் நயந்து, இலக்கிய சிறப்புடன் விடை எழுதுதல்

- இந்த வினாப்பகுதியில் செய்யுள் அல்லது கவிதைப் பகுதிகளில் இருந்து ஏதேனும் ஒன்று முழுமையாகத் தரப்படும். அதன் கீழ் ஐந்து வினாக்கள் கேட்கப்படும். 30 புள்ளிகள்.

- இதுவரை இப்பகுதியில் இடம்பெற்ற அலகுகள்

2021 - கானல்வரி (செய்யுள் பகுதி)
2022 - கிஷ்கிந்தைப்படலம் (செய்யுள் பகுதி)
2023 - புத்தகசாலை (கவிதைப் பகுதி)
2024 - அமுதம் (கவிதைப் பகுதி)

இவ்வருடம் இலக்கியம் நயத்தல் பகுதியில், எதிர்ப்பார்க்கக் கூடிய அலகுகள்

காலந்தோறும் அகம், புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்.

**வினா இலக்கம் – 4,5,6,7**

- கட்டமைப்பு வினாப்பகுதிகள் இவை.
- 15 புள்ளிகளைக் கொண்ட வினாப்பகுதிகள். இவற்றில் இருந்து இரண்டு வினாக்களை தெரிவு செய்து விடையளிக்க வேண்டும்.
- இந்த நான்கு வினாப்பகுதிகளில் செய்யுள் அல்லது கவிதைப் பகுதிகளில் இருந்து இரண்டு வினாக்களும், சிறுகதைப் பகுதிகளில் இருந்து ஒரு வினாவும், கட்டுரைப் பகுதிகளில் இருந்து ஒரு வினாவும் வினவப்பட்டு வருகின்றன.

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை 2025 (2026)**
**தமிழ் இலக்கிய நயம் T - 48**
**மாதிரி வினாத்தாள்**

## வினாத்தாள் – I

**வினாத்தாள் - I இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**

1. " ஆட்சியியல் மறு பாடம் - உடல் அங்கே எனினும்
மனம் எங்கோ ஓடும் ஆட்சி செய்யும்
உனைச் சாடும் நான் ஆழிச்சுழியில் மிதந்திடும் ஓடம்.."

அ. குறித்த பாடவேளையில் காதலனின் மனநிலை எவ்வாறு காணப்படுகின்றது?

.....................................................................................................................................

.....................................................................................................................................

ஆ. இங்கு கையாளப்பட்டுள்ள உருவக அணியைக் குறிப்பிட்டு விளக்குக?

.....................................................................................................................................

2. " ஒரு சுலபமான வழி இருக்கின்றது, பூனை வளர்த்தால் எலி கிட்டேயும் வராது,
பூனை ஒன்றை வளருங்கள்"

அ. மேற்படி ஆலோசனை யாரால் யாருக்கு கூறப்பட்டது?

.....................................................................................................................................

ஆ. பூனை வளர்க்கும் ஆலோசனையை முன்வைத்தமைக்கு அவர் கூறும் காரணம் யாது?

.....................................................................................................................................

.....................................................................................................................................

3. " போர்க்களத்தில் மாவீரர்களையும் வென்ற வீரன், பாவையின் பார்வை அம்பு பட்டால் தோற்றுப் போய் அவள் காலடியில் விழுந்துவிடுகின்றான்"

அ. மென்மையின் வலிமை இங்கு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

.....................................................................................................................................

.....................................................................................................................................

ஆ. பாவையின் பார்வை அம்புகளின் தாக்கம் இங்கு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

.....................................................................................................................................

.....................................................................................................................................

4. "பாதி வழி வந்து தாமரைக் கை தந்த பச்சை அமுதமைய்யா.."

அ. மனைவி கணவன் மீது கொண்டுள்ள அன்பு எவ்வாறு புலப்படுகின்றது?

.....................................................................................................................................

.....................................................................................................................................

ஆ. தலைவியின் கை அழகை கூறுவதில் புலப்படும் நயத்தை விளக்குக?

.....................................................................................................................................

.....................................................................................................................................

5. " அனை, எதிர்த்து ஆய்வளையரோடும் மனையின் வாயில்
வழியினை மாற்றினால் நினையும் வீரன் அந் நீள் நெறி நோக்கலான் "

அ. இவ்வாறு உபாயம் கூறியது யார்?

.....................................................................................................................................

ஆ. அவ்வாறு கூறியவர், இலக்குவன் பண்பு பற்றிய யாது எடுத்துரைக்கின்றார்?

.....................................................................................................................................

.....................................................................................................................................

## 02. கீழ்க்காணும் உரைப்பகுதியை அல்லது செய்யுட்பகுதியை வாசித்து தரப்பெற்ற வினாக்களுக்கு விடை எழுதுக.

வன்மை வன்மையின் மேல் தான் போர் தொடுக்கிறது. வலிமை தான் பாதுகாக்கும் என்று நினைக்கின்றோம். வலிமையான ரவுடிகள் சீக்கிரம் செத்துப் போகிறார்கள். மென்மையானவர்கள் நீண்ட நாள் உயிர் வாழ்கின்றார்கள். 'வாளை உருவியவன் வாளாலேயே சாவான்' என்கின்றது பைபிள். வலிமையே வாழும் என்று நினைக்கின்றோம். ஆனால் ஆங்கிலேயரின் வலிமையான படையை காந்தியடிகளாரின் அகிம்சை வென்றதை வரலாறு காட்டுகின்றது. கொடியவர்களையும் இசை மென்மையானவர்களாக்கி விடுகின்றது. பாலைப்பண் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் கொடிய மனத்தையும் மாற்றி கீழே போட்டு விடச் செய்யும் என்கின்றார் பொருநராற்றுப்படையில் முடத்தாமக் கண்ணியார். வன்மையின் வெற்றி அற்பமானது, மென்மையின் வெற்றி நுட்பமானது. ஆண் வன்மையானவன். பெண் மென்மையானவள் . இருவரும் மற்போர் புரிந்தால் ஆண் வெற்றி பெற்று விடுவான். பெண் ஆணை அன்பால் வென்று விடுவாள். போர்க்களத்தில் மாவீரர்களையும் வென்ற வீரன் பாவையின் பார்வை அம்பு பட்டால் தோற்றுப் போய் அவள் காலடியில் விழுந்து விடுகின்றான். போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்குத் தோற்று அழிந்து விட்டதே, ஓ என அலறும் ஒரு போர் வீரனை காமத்துப் பாலில் காட்டுகின்றார் திருவள்ளுவர். வன்மையின் வெற்றி புறவயமானது. மென்மையின் வெற்றி அகவயமானது. ஆண் புறவயமாகவே பெண்ணை ஆள முடியும். பெண்ணோ ஆணை அகவயமாக ஆள்கின்றாள். வன்மையால் மண்ணைத்தான் பிடிக்கமுடியும். மனங்களைப் பிடிக்க மென்மை தான் உதவும். வன்மையானவர்களுக்கு வரலாறு என்ற மயானத்தில் மட்டுமே இடம் கிடைக்கிறது. மென்மையானவர்களுக்கோ அழியாத காவியங்களில் இடம் கிடைக்கின்றது. வன்மையின் வெற்றிக்கு அற்பாயுசு, மென்மையின் வெற்றிக்கு தீர்க்காயுசு. உண்மையின் மென்மையே வன்மை.

அ. மென்மையே வெல்லும் என்பதற்கு கூறப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகள் எவை?

.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................

ஆ. ஆண், பெண் இயல்பு பற்றி பத்தியில் கூறப்பட்டிருப்பவை எவை?

.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................

இ. பாலைப் பண்ணின் இயல்பு குறித்து உரைப்பகுதியில் யாது கூறப்படுகின்றது?

.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................

ஈ, இவ்வுரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள இலக்கியங்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் குறிப்பிடுக?

.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................

(20 புள்ளிகள்)

அல்லது

தனித்து அமைந்த வீட்டில் புத்தகமும் நானும் .
சையோகம் புரிந்ததொரு வேளை தன்னில்
இனித்த புவி இயற்கை எழில் எல்லாம் கண்டேன்
இசை கேட்டேன், மணம் மோந்தேன் சுவைகள் உண்டேன்
மனிதரிலே மிக்கு உயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகா சோதியில் கலந்தது எனது நெஞ்சம்
சனித்தது அங்கே புத்துணர்வு, புத்தகங்கள்
தரும் உதவி பெரிது, மிகப் பெரிது கண்டீர்.

மனிதர் எல்லாம் அன்பு நெறி காண்பதற்கும் .
மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து
தனி மனித தத்துவமாம் இருளைப் போக்கி
சக மக்கள் ஒன்று என்பதை உணர்வதற்கும்
இனிது இனிதாய் எழுந்த உயர் எண்ணம் எல்லாம்
இலகுவது புலவர் தரு சுவடிச்சாலை
புனிதம் உற்று மக்கள் புது வாழ்வு வேண்டில் .
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்

தமிழர்க்கு தமிழ்மொழியில் சுவடிச்சாலை
சர்வகலாசாலையைப் போல் எங்கும் வேண்டும்
தமிழில் இல்லா பிறமொழி நூல் அனைத்தும்
நல்ல தமிழாக்கித் தருதல் வேண்டும்
அமுதம் போல் செந்தமிழில் கவிதை நூல்கள் .
அழகியவாம் உரை நடையில் அமைந்த நூல்கள்,
சுமைசுமையாய் சேகரித்துப் பல்கலைசேர்
துறைதுறையாய் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்

நாலைந்து வீதிகளுக்கு ஒன்று வீதம் .
நல்லதுவாய் வசதியால் இல்லம் வேண்டும்
நூலெல்லாம் முறையாக ஆங்கு அமைத்து
நொடிக்கு நொடி ஆசிரியர் உதவுகின்ற
கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும்
ஆங்கு குவிந்திருக்க வகை செய்து தருதல் வேண்டும்
மூலையிலோர் சிறு நூலும் புது நூலாயின்
முடிதனிலே சுமந்து வந்து தருதல் வேண்டும்

அ. புத்தக வாசிப்பில் ஈடுபட்டிருந்த கவிஞரின் அனுபவம் எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது?
………………………………………………………………………………………………………………….
………………………………………………………………………………………………………………….
………………………………………………………………………………………………………………….
………………………………………………………………………………………………………………….
………………………………………………………………………………………………………………….
………………………………………………………………………………………………………………….
………………………………………………………………………………………………………………….
………………………………………………………………………………………………………………….
………………………………………………………………………………………………………………….
………………………………………………………………………………………………………………….
………………………………………………………………………………………………………………….

ஆ. புத்தகசாலை நாட்டில் எங்கும் அமைந்திருக்க வேண்டும் என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணங்களைக் குறிப்பிடுக?

……
……
……
……
……
……
……
……
……
……

இ. கவிஞர் விரும்பும் புத்தகசாலையின் அமைப்பு பற்றிய கருத்துக்களை தெளிவுறுத்துக?

……
……
……
……
……
……
……
……
……
……
……
……

ஈ. இங்கு இடம்பெற்றுள்ள உவமையணிகளைக் குறிப்பிட்டு அவற்றில் காணத்தகும் நயங்களை விளக்குக?

……
……
……
……
……
……
……
……

(20 புள்ளிகள்)

# வினாத்தாள் - II

வினாத்தாள் **II** இல் முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய 2,3,4,5 ஆகிய வினாக்களில் எவையேனும் விரும்பிய **இரண்டு** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

---

**1. பின்வரும் செய்யுளை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களின் அடிப்படையில் செய்யுளை நயந்து குறைந்த பட்சம் 200 சொற்களில் விடை எழுதுக.**

சுனைப் பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந்தனளோ இலளோ பானாள் பள்ளி
யானையின் உயிர்த்தென்
உள்ளம் புன்னுந் தன்னுழை அதுவே

சிரல்வாய் வனப்பினவாகி நிரலொப்ப
ஈர்த்தண் தளவம் தகைத்தன சீர்தக்க
செல்வ மழை மதர்க் கண் சின்மொழிப்
பேதையூர் நல் விருந்தாக நமக்கு

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடை தாமம் நிரை தாழ்ந்த பந்தற் கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி நான்.

உள்ளம் போய் நாண் போய் உரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம் போய் வேகின்ற மென்தளிர் போல் பிள்ளை மீன்
புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி
உள்ளரிக்கச் சோர்ந்தாள் உயிர்

நேற்றிரா வந்தொருவன் நித்திரையில் கை பிடித்தான்
வேற்றூரான் என்று விடாயென்றேன் ஆற்றியே
க(கா)ஞ்சி குடியென்றான் களி(த்)தின்று போவென்றேன்
வஞ்சியரே சென்றான் மறைந்து

**அ. காலந்தோறும் அகம் என்பதன் சிறப்பியல்**
**ஆ. சிற்றின்பக் காதலின் வெளிப்பாடு**
**இ. தலைவியரது பேரின்பக் காதல்**
**ஈ. பெண்களது அழகினைக் கூறுவதன் சிறப்பு**
**உ. உவமையணிகளும் அவற்றில் நீர் காணும் நயங்களும்**

### மேலதிகமாக கற்க வேண்டியது...

காலையிலே பனி காயும் முன்னே குளிர்
காற்றையும் கிழித்துமே ஓடுகின்றோம் - தொழிற்
சாலையிலே சங்கு ஊது முன்னே பசுந்
தங்கத் தளிரினை கிள்ளிடுவோம்

வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும் - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும், தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்

கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் கிறுக் கிறுக் ஓசையிலே - நெஞ்ச
மேடையிலே சதிராடும் எண்ணங்களின்
வேதனை துன்ப ஒலி கேட்கும்

பக்க நிரைச் செடி சிக்கிடும் போதிலும்
பக்குவமாக விலக்கிச் செல்வோம் - எம்மை
சிக்க வைத்திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி எறியத் துணிவு கொள்வோம்

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில் - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்

என்றும் அடிமைச் சிறையினிலே வைத்த
எத்தர்கள் கொட்டமடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் நாம் போரிட முன் வருவோம்

பெண்ணுக்கு கல்வி பெருந் தீது, உரிமை
பேசிடிலோ அது பெருந்தவறு, என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணில் புதைந்திட
எண்ணற்கு அரிய கலை படைப்போம்

சாதிச் சமயச் சங்கறுத்து, பெண்கள்
தாழ்வு எனும் தீய போக்கழித்து, இம்
மேதினியில் புது மாற்றம் படைத்து பெண்
விடுதலைக் கீதம் இசைத்திடுவோம்

பெண்ணுக்கு இங்கோர் தனி நீதி - என
பேசிடும் நூல்கள் எவையெனினும் - அவை
மண்ணில் புதைந்து மகிழ்ந்திடுவோம் - நவ
மாதர் அறங்கள் படைத்திடுவோம்

1. மலையப் பெண்களின் கடின உழைப்பு
2. மலையகப் பெண்களின் உரிமைச் சிந்தனைகள்
2. மலையகப் பெண்களின் அழகு
3. மலையகப் பெண்கள் விடுதலை உணர்வு
4. கவிதையில் பயின்றுள்ள உவமைகளின் காணத்தகும் நயம்

**கட்டமைப்பு வினாக்கள்..**

3. **தாய்ப்பசு** சிறுகதையில்,

    அ. பசுவின் நடத்தைக்கூடாக உயிரிக்கமும்
    ஆ. மனிதனின் நடத்தைக்கூடாக சுயநலமும்

புலப்படுமாற்றினை எடுத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

4. **பெண்களின் கண் அழகு,**

    அ. விவேகசிந்தாமணிப் பாடல்கள்
    ஆ. அழகான ஒரு சோடிக் கண்கள்

**ஆகியவற்றின் ஊடாக புலப்படுவதை தெளிவுறுத்துக**

(15 புள்ளிகள்)

5. **நலம்புனைந்து உரைத்தல்** அதிகாரத்தில்,

    அ. மலர்களோடு ஒப்பிட்டு தலைவியின் அழகும்
    ஆ. மதியோடு ஒப்பிட்டு தலைவியின் அழகும்

புனைந்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

6. **மரம் என்பது உயர்திணை** எனும் பத்தி எழுத்தில்,

    அ. மனிதனது வாழ்வில் மரங்கள் பெறும் முக்கியத்துவம்
    ஆ. மனிதனுக்கும் மரத்திற்கும் இடையிலான வேறுபாடு

என்பன வலியுறுத்தப்படுமாற்றினை எடுத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

**மேலதிகமாக கற்க வேண்டியது...**

1. **கிஷ்கிந்தைப்படலம் பாடப்பகுதியில்,**

    அ. சுக்கிரீவனின் குற்றங்களாக இராமனால் கூறப்படுபவை
    ஆ. தாரையினது தோற்றமும், பேச்சாற்றலும்

2. **கானல்வரி பாடப்பகுதியில்,**

    அ. சோழ மன்னனின் பெருமையும், ஆற்றலும்
    ஆ. காவேரி நதியின் வர்ணிப்பில் புலப்படும் நயங்கள்

3. **பெருமரமாகிப் போனதொரு வாழ்வு கட்டுரையில்,**

    அ. ஒளிப்பதிவில் பாலுமகேந்திரா காட்டிய தீவிரம்
    ஆ. காட்சிகளைப் படைப்பதில் பாலுமகேந்திராவின் தனித்துவம்

4. **வஞ்சியர் காண்டம், நாடகத்தில்**

    அ. கண்ணகியின் உயர்வு
    ஆ. மாதவி மீதான கண்ணகியின் மதிப்பு